| | | தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். | 23 | 2024.12.08 | பி.ப. 01.00 - பி.ப. 4.00 |

15.

15.1 வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு உரித்துடைய பாடங்களில் சித்தியெய்தும் தேவைப் பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும்.

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | சட்டம் | பரிஸ்டர் (Barrister) அல்லது இலங்கை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் ஆக இருத்தல். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல். |

**குறிப்பு 1** : இலங்கை நிர்வாக சேவையின் 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் 2012.07.01 ஆம் திகதி தொடக்கம் 2013.12.23 ஆம் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின் படி முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டலில் சமூகவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு வழங்கப்படும் விலக்களிப்பு இதற்குப் பொருந்தும்.

15.2 இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5 (ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பானது அமுலுக்கு வரும் திகதியன்று (2012.07.01 ஆம் திகதியன்றுக்கு) முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் கீழ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்துவதற்கு இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும் ஏற்கனவேயுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைப் பூர்த்தி செய்தல் வேண்டும். ஒத்திசைவுடைய பாடங்கள் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2005 .11.14 ஆம் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆம் திகதிய 1842/2 ஆம் இலக்க புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 01. | சட்டம்(முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) | சட்டம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 02. | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |

| | 2005 .11.14 ஆம் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆம் திகதிய 1842/2 ஆம் இலக்க புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 03. | பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 04. | அரசாங்கத் துறையின் நிதியியல் முகாமைத் துவம் (இரண்டாம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) | அரசதுறையின் நிதியியல் முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 05. | ஆங்கிலம் (முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) | இணைப்பு (ஆங்கில) மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 06. | பொருளியல் மற்றும் சமூகக்கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ) | பொருளியல் மற்றும் சமூகக்கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 07. | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ) | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ) |
| 08. | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு முறைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ) | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பப் பாவனை (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ) |

16. பெறுபேறுகளை வெளியிடுதல் - இப் பரீட்சைக்காக விண்ணப்பித்த / தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் நீதிமன்றம்; பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்கத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் பிரத்தியேகக் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

17. இப்பரீட்சை அறிவித்தல் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது நீதிமன்றம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கொள்ளப்படும்.

18. இப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது, குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எஸ். ஆலோக்கபண்டார,
செயலாளர்,
நீதிமன்றம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

நீதிமன்றம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2024, ஒற்றோபர் 18.

11-04

## நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சிய பொறுப்பாளர் III ஆம் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2024

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சிய பொறுப்பாளர் III ஆம் தரத்தின் பதவிகளுக்கு வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமைப்பெற்றுள்ள இலங்கைப்பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. (i) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் : இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கிணங்க (செ.மீ. 21×19 (A4) அளவிலான கடதாசியை இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ii) இலக்கம் 1.0 தொடக்கம் 3.0 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும் இலக்கம் 4.0 தொடக்கம் 6.0 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவற்றை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு கணினி மூலம் தயாரித்து, அதற்குரிய தகவல்களை தனது கையெழுத்தினால் தெளிவாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iv) விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக அமையும். மேலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள மொழியிலுள்ள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலுள்ள விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

(v) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2024.11.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(vi) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது பரீட்சைக் கட்டணமாக ரூபா 600.00 பணத்தொகைச் செலுத்துவது கட்டாயமாகும். அதனை இலங்கை வங்கி, வைத்தியசாலை வீதி, கொழும்பு 01, தப்ரோபேன் கிளை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் எனும் பேரில் நடத்திச்செல்லப்படும் கணக்கிலக்கம் 7042385 என்ற இலக்கத்திற்கு வரவு வைக்குமாறு செலுத்தி பற்றுச்சிட்டினை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

(vii) விண்ணப்பங்களை அனுப்பும் போது "களஞ்சிய பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் 2024" என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுக.

(viii) அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் உள்ள அனைத்து விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய தினத்திற்கு முன்னர் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ix) விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(x) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத, பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்** : பரீட்சை நிலைய அதிகாரி திருப்தியடையக் கூடியவாறு விண்ணப்பதாரர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்படும் ஏதேனும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களைப்பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை;

அல்லது

ii. செல்லுபடியான கடவுச் சீட்டு;

அல்லது

iii. செல்லுபடியான வாகன அனுமதிப்பத்திரம்.

4. பொய்யான தகவல்களை வழங்குதல் - விண்ணப்பங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். எந்த விண்ணப்பதாரருக்கேனும் தகைமை இல்லை என நிரூபிக்கப்பட்டால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்த சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும்.

5. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

6. (i) இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் (MN 01-2016) சம்பள பிரிவிற்கிணங்க ரூ. 27,140 - 300 ×10 - 350 ×11 - 495 ×10 - 660 ×10 - ரூ. 45,540.00 என்பதோடு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்கவாகும்.

(ii) பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நான்காவது சம்பள நிலையை அடைய முன்னர் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

7. (i) வயதெல்லை: விண்ணப்பம் பாரமெடுக்கும் இறுதித் தினத்திற்கு வயதானது 18 க்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரி எனின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் தினத்திற்கு 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. விதவைகள் அநாதைகள் /தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு நிதி செலுத்துதல் வேண்டும். ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அவ்வாறே 2022.12.14 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2310/ 29 ஆம் இலக்க நடைமுறை ஒழுங்கு விதிகளுக்குட்பட்டதாகும்.

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 7/2007 மற்றும் அதனுடணைந்த சுற்றறிக்கைகளுக்குரிய மட்டத்தில் மொழித்திறனை உரிய காலத்தினுள் பெற்றிருத்தல்.

(iv) பொதுவான காரியாலய களஞ்சியப் பொருட்கள் மற்றும் திணைக்கள நிர்மாண வேலைத்தளம் மற்றும் கருத்திட்டத்திற்குரிய இயந்திர உபகரணங்கள், பொறியியல் மூலப்பொருட்கள் என்பவற்றை பொறுப்பில் வைத்துக்கொள்வது முறையாக விநியோகிப்பது பதவிக்குரிய கடமையாகும்.

(v) அரசாங்க ஊழியர் என்ற வகையில் தாங்கள் தீவின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கடப்பாடுடையவராவர்.

9. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள்.-**

(அ) சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி, கணிதம், மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உ. தர)ப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை இன்றி)

II. **தேகாரோக்கிய தகைமைகள்:-**
இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைப்புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

III. **ஏனைய தகைமைகள் :-**
(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

(ஈ) மேலே 9 (I) (அ) (ஆ) தகைமைகளுக்கு மேலதிகமாக தகுதிகாண் காலத்தினுள் கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படும் களஞ்சியப்படுத்தல் சம்பந்தமான மூன்று (03) மாத பயிற்சி நெறியை வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பது பதவியை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான தகைமை ஆகும்.

10. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் மூலப் பிரதியை தேவையானபோது கையளிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்,
II. கல்விச் சான்றிதழ்கள்,
III. அவசியத்தை தெரிவித்ததன் பின்னர் 06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்

11. **நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் முறை** : இந்த ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சையானது சிங்கள மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படுவதோடு விண்ணபிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுள் அதிக புள்ளிகளைப்பெற்ற வரிசை ஒழுங்கில் தெரிவு செய்யப்படுவர். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும்).

இப்பரீட்சை 2024 இல் கொழும்பு நகருக்குள் மாத்திரம் நடாத்தப்படும்.

12. தெரிவு செய்யும் முறை:

எழுத்து மூலப் பரீட்சை

| வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளி | காலம் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 | 01 மணித்தியாலம் |

(நுண்ணறிவுப் பரீட்சை - விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான மற்றும் பகுப்பாய்வு பற்றிய இயலுமை தீர்மானித்தல் தர்க்க ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பவற்றைக்கொண்ட வினாக்களாக அமையும்.)

13.(i) பரீட்சைக்குத் தோற்றுதல்: பரீட்சை நடாத்தப்படும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். அனுமதி அட்டை இன்றி விண்ணப்பதாரர் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலைய அதிகாரியிடம் தனது கையொப்பமிடப்பட்ட அனுமதி அட்டையை கையளிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி www.irrigation.gov.lk என்ற வளைத்தளத்தில் Downloads _ Exam இன் கீழ் அறிவித்தல் விடுவிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்தும் அனுமதி அட்டைக் கிடைக்காதவிடத்து அது பற்றி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தங்கள் கைவசமுள்ள விண்ணப்பத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றையும் பதிவுத்தபால் செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசமாயின், அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் கோரிக்கை விடுப்பது செயற்திறனாக அமையும்.

14. விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரால் அல்லது சமாதான நீதவான் ஒருவரால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அல்லது அரசாங்க சேவையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

15. பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரர் கீழ்படிதல் வேண்டும். இவ் ஒழுங்குவிதிகள் மீறப்படுமாயின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

16. இந்த பரீட்சையை நடாத்துதல், வெற்றிடத்தை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுப்பது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

**குறிப்பு** - இந்த வர்த்தமானி அறிவித்தலானது தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் காணப்படுவதோடு ஏதேனும் தெளிவின்மைக் காணப்பட்டால் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

எந்திரி. அஜித் குணசேகர,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2024, ஒற்றோபர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சிய பொறுப்பாளர் III ஆம் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2024**

**The open Competitive Examination for the Recruitment to the Post of Store Keeper (Grade III) in the Irrigation Department** - 2024

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்பிக்கும் மொழி மூலம்

சிங்களம் 1
தமிழ் 2 ☐

1.0 1.1 விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ..........................................
(ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)
(உதாரணம் : PERERA , A.B.C)

1.2 விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ..........................................
சிங்களத்தில் / தமிழில்

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................
(ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................
சிங்களத்தில் / தமிழில்

1.5 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

1.6 ஆண் /பெண் (உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

பெண் - 1
ஆண் - 2 ☐

2.0 2.1 நிரந்தர முகவரி : ........................................................................................................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி : ........................................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.3 பரீட்சை அனுமதி பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி

I. சிங்களத்தில் / தமிழில் : ........................................................................................................................

II. ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ...........................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : கையடக்கத் தொலைபேசி : ..........................................................................................

3.0 3.1 திருமணமானவர்/ திருமணமாகாதவர்
திருமணமானவர் 2 / திருமணமாகாதவர் 1 : ☐

3.2 பிறந்த திகதி :- உரிய கூட்டினுள் எழுதவும்

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று வயது : .....................................................................................

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

3.4 தாங்கள் இலங்கை பிரசையாவது பிறப்பினாலா? பதிவினாலா? : ........................................

4.0 கல்வித் தகைமைகள்:

4.1 க.பொ.த(சா.த) பரீட்சை பற்றிய விபரம் :

i. பரீட்சையின் வருடமும் மாதமும் : ........................................
ii. சுட்டெண் : ........................................

| பாடங்கள் | பெற்ற சித்தி | பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம்

i. பரீட்சையின் வருடமும் மாதமும் : ........................................
ii. சுட்டெண் : ........................................

| பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 ஏனைய தகைமைகள் :
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

5.0 பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டுக.

| |
|---|
| |

6.0 தாங்கள் ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற தண்டனைக்குட்பட்டவரா?
உரிய கூட்டினுள் X அடையாளமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆம் | | | இல்லை | |

அவ்வாறு தண்டனைப் பெற்றிருப்பின், அது எந்த குற்றத்திற்காக எனவும் எந்த நீதிமன்றம் பெற்ற தண்டனையையும் குறிப்பிடுக: ..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என கௌரவத்துடன் உறுதி கூறுகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது விடயங்கள் பூரணப்படுத்தப்படாமல் மற்றும் / அல்லது பொய்யாக பூரணப்படுத்தி இருந்தால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு ஏற்றுக்கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். மேலும் இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானது என உறுதி கூறுகிறேன்.

(ஆ) பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு இணங்க செயற்படுவதற்கும், இந்த நிபந்தனைகளுக்கிணங்க நான் தகைமையற்றவர் என நிரூபிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன்.

(இ) இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் கிடைப்பதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த தகவல்களையும் பின்னர் மாற்றமாட்டேன்.

...........................
திகதி ........................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ......................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் ...................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

....................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்
கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை.

திகதி:.................................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர்: ...............................................
பதவி: ...............................................
முகவரி: ............................................

*9.0* திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு மட்டும்)

திரு. / திருமதி / செல்வி ........................................................................................ என்பவர் ................................ சேவையிலீடுபட்டுள்ளார் எனவும் அவர் ........................................... பதவியை வகிக்கிறார் எனவும் அவரால் மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது என உறுதியளிக்கின்றேன். இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் ........................................... சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

மற்றும் அலுவலக முத்திரை.

திகதி : ............................................

*11-33*

---

## தொழில்நுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி – 2024/ 2025

தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மூன்று (03) வருடகால முழுநேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்படும்.

1. **பொதுவானவை.**- தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறியானது, இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற்பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :

(அ) **கடல்சார் கற்கைநெறிகள் (வகை I)**

(i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்

(ii) கப்பற்றுறை கல்வி

**(ஆ) ஏனைய கற்கைநெறிகள் (வகை II)**

(i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்

(ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்

(iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்

(iv) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்

(v) தகவல் தொழில்நுட்பம்

(vi) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்

(vii) பல்பகுதிய தொழில்நுட்பம்

(viii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்

2. **தகைமைகள் :**

2.1 **வயது மற்றும் தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரிகள் 31.12.2023 ஆந் திகதியன்று 24 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்;

(ஆ) 31.12.2023 இல் 20 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்துறைக் கல்வி கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார்

கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கை நெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

**2.2 கல்வித் தகைமைகள்**

(அ) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில், கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றில் (03) சித்திபெற்றிருத்தல் வேண்டும் :

(i) பௌதிகவியல்
(ii) இரசாயனவியல்
(iii) இணைந்த கணிதம்
(iv) உயர் கணிதம்

அத்துடன், இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2021 அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) "கடல்சார் கற்கைநெறிகள்" (வகை I) க்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C pass) பெற்றிருக்க வேண்டும்.

**3. தெரிவு முறைமை:**

**3.1 கற்கைநெறிக்கான அனுமதி**

அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ./த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது இசற்-மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

**3.2 கற்கைத்துறை**

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

**4. விண்ணப்பிக்கும் முறை :**

**4.1 விண்ணப்பப்படிவம் :**

(i) முதலில், விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்ட இணையத்தள முகவரியில் பதிவேற்றப்பட்டுள்ள ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவத்தின் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

http://www.itum.mrt.ac.lk

(ii) பின்னர், ஒன்லைன் (online) மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் சுயமாக பதிப்பிடக்கூடிய பிரதியை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்யப்படல் வேண்டும் (download the auto generated printable copy of the online application)

(iii) பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒன்லைன் கடின நகல் (hard copy), விண்ணப்பப்படிவமானது பதிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் (விண்ணப்பப்படிவத்தின் 3 ஆம் மற்றும் 5 ஆம் கட்டங்களை பார்க்க).

(iv) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது (hard copy), கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "NDT Admission 2024/ 2025" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "Assistant

Register, Academic & Student Affairs Division, Institute of Teachnology, University of Moratuwa, Diyagama, Homagama" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) ஒன்லைன் (online) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலானது விண்ணப்ப முடிவு திகதி அன்று அல்லது அதற்கு முன்னராக மேற்குறிப்பிட்ட முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

(vi) தமது விண்ணப்பப்படிவத்துடன் (hard copy), ஒரு சுய முகவரியிடப்பட்ட ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"×4") கடித உறையையும் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு** : ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் ஆகிய இரண்டையும் விண்ணப்ப முடிவு திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்க. ஒன்லைன் (online) விண்ணப்பம் மற்றும் விண்ணப்பத்தின் பதிப்பிடப்பட்ட நகல் இரண்டையும் சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட பரிசீலனைக்கு கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.

4.2 **கற்கை நெறிக்கான முன்னுரிமை** :

(i) இரண்டு வகை கற்கைநெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கடல்சார் கற்கைநெறிகள் (வகை I) அல்லது ஏனைய கற்கைநெறிகள் (வகை 2) அல்லது இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டு கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு தெரிவு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) கற்கைநெறிகள் வகை (I) முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. **கடல்சார் கற்கைநெறிகளுக்கு** விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்.

(iv) கற்கைநெறிகள் வகை (II) கான முன்னுரிமை வரிசையை குறிப்பிடும் போது, முதலாவது விருப்பு 1, இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்களது விருப்ப தெரிவு வரிசையை 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என வரிசைப்படுத்துதல் வேண்டும்.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்**.- ஏதாவதொரு கற்கைநெறிக்கு (வகை I அல்லது வகை II) விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபா) உம் இரண்டு கற்கைநெறிகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூபா 1,200.00 (ஆயிரத்து இருநூறு ரூபா) உம் விண்ணப்ப கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளையில் உள்ள கணக்கு இல. 83062337 க்கு வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) ஒன்லைன் விண்ணப்பத்துடன் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்தின் பதிப்பிடப்பட்ட நகலுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(iii) **விண்ணப்ப முடிவுத் திகதி** விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 02.12.2024.

6. **தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரீட்சை**.- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம் மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சை மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

7. **பதிவு செய்தல்.**- இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பதிவு செய்யும் நாளில் சமர்ப்பித்தல் வேண்டும் :

- க. பொ. த. (உ. த.) சான்றிதழ்
- க. பொ. த. (உ. த.) இசற் - மதிப்பீடு (Z - Score) சான்றிதழ்
- பாடசாலை விலகற் சான்றிதழ்
- பிறப்புச் சான்றிதழ்
- சான்றிதழ்கள் அல்லது வேறு ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான அத்தாட்சிப்பத்திரம்

8. **முக்கிய குறிப்புகள்**

(i) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவு செய்த பரீட்சார்த்தி ஒருவர், அக்கற்கைநெறிக் காலப்பகுதியில், இந்நிறுவகத்திலோ அல்லது இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலோ ஏதாவதொரு கற்கை நெறியை பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கும் தகுதியற்றவராவர்.

(ii) ஏற்கனவே இந் நிறுவகத்திலோ அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதாகவும் சரியானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள தகவல்கள் உண்மைக்கு முரணானது அல்லது தவறானது என அறியப்பட்டால் அவ் விண்ணப்பதாரி இக்கற்கை நெறிக்கான கற்றல் நடவடிக்கைகளில் இருந்து இடை நிறுத்தப்படுவார்.

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவகம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

11-52

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்***.

***அட்டவணை - 2024***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***நவெம்பர்*** | .. | வெள்ளி | *01.11.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *18.10.2024* |
| | | வெள்ளி | *08.11.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *25.10.2024* |
| | | வியாழன் | *14.11.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *01.11.2024* |
| | | வெள்ளி | *22.11.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *08.11.2024* |
| | | வெள்ளி | *29.11.2024* | .. | நண்பகல் *12* | வியாழன் | *14.11.2024* |
| ***திசெம்பர்*** | .. | வெள்ளி | *06.12.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *22.11.2024* |
| | | வெள்ளி | *13.12.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *29.11.2024* |
| | | வெள்ளி | *20.12.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *06.12.2024* |
| | | வெள்ளி | *27.12.2024* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *13.12.2024* |

***அட்டவணை - 2025***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | *03.01.2025* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *20.12.2024* |
| | | வெள்ளி | *10.01.2025* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *27.12.2024* |
| | | வெள்ளி | *17.01.2025* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *03.01.2025* |
| | | வெள்ளி | *24.01.2025* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *10.01.2025* |
| | | வெள்ளி | *31.01.2025* | .. | நண்பகல் *12* | வெள்ளி | *17.01.2025* |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.